**தன்னாட்சி**
***(உள்ளாட்சி உங்களாட்சி)***
**பதிவு எண்: 272/2018**
69, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001.
மின்னஞ்சல் : thannatchi@gmail.com

**M. ஜாகிர் ஹுசைன்**
தலைவர்
98840 17119

**க. சரவணன்**
பொதுச் செயலாளர்
97512 37734

**21.11.2024**

**தொடர்ந்து குறைக்கப்படும் வேலை நாட்கள்**

**நூறு நாள் வேலைத் திட்டத்தில், தேவை நிர்வாகச் சீர்திருத்தம்!**

**தமிழ்நாடு அரசுக்கு தன்னாட்சி கோரிக்கை**

நூறு நாள் வேலைத் திட்டம் என்று அறியப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம், MGNREGA-2005 சட்டப்படி முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை, கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து கண்காணித்து வரும் அரசு சாரா நிறுவனம், லிப்டெக் இந்தியா (LibTech India). இந்த அமைப்பு, நடப்பு நிதியாண்டில் (2024-25), ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில், இந்திய அளவில் ஒவ்வொரு மாநிலத்திலும் நூறு நாள் வேலைத் திட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது குறித்து மேற்கொண்ட ஆய்வுத் தகவல்களை சமீபத்தில் வெளியிட்டது (பார்க்க: https://libtech.in/wp-content/uploads/2024/10/India_Apr-Sep_2024.pdf).

ஒன்றிய அரசின் அதிகாரப் பூர்வ இணையதளத்திலிருந்து எடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் நூறு நாள் வேலை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முக்கிய சவால்களைப் பட்டியலிடும் இந்த அறிக்கையில், தமிழ்நாட்டில் தொடர்ந்து வேலை நாட்கள் குறைக்கப்பட்டு வருவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2023-24 நிதியாண்டில் ஏப்ரல்-செப்டம்பர் கால கட்டத்தில் வழங்கப்பட்ட வேலை நாட்களோடு, நடப்பு நிதியாண்டில் அதே கால கட்டத்தில் வழங்கப்பட்ட வேலை நாட்களை ஒப்பிட்டு பார்க்கும்போது, மற்ற மாநிலங்களை விடத் தமிழ்நாட்டில் தான் மிகக் குறைவான வேலை நாட்கள் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை ஆதாரங்களுடன் அந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. ஏப்ரல்-செப்டம்பர் காலத்தில், கடந்த நிதி ஆண்டைவிடத் தமிழ்நாட்டில், இந்த நிதியாண்டு, சுமார் 59.1% வேலை நாட்கள் குறைவாக வழங்கப்பட்டிருப்பதை லிப்டெக் ஆய்வுத் தகவல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில், பெரும்பான்மையான எளிய மக்களின் வாழ்வாதாரமாக நூறுநாள் வேலைத்திட்டம் இருக்கும் சூழலில், இதுபோல் வேலை நாட்கள் குறைந்தால், மக்கள் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாவார்கள். மேலும், மக்களுக்கு அரசின் மீதான அதிருப்தி அதிகரிக்கும். தன்னாட்சியின் களப் பணிகளில், பல கிராம ஊராட்சிகளிலும் தற்போது பணிகள் வழங்கப்படாததை அல்லது மிகக் குறைந்த நாட்கள் மட்டுமே பணிகள் வழங்கப்படுவதைப் பார்க்க முடிகிறது.

ஒவ்வொரு கிராம ஊராட்சியும் தங்கள் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளத் திட்டமிடும் பணிகளைத் தொகுத்து (Shelf of projects), அதன் அடிப்படையில் ஆண்டுத் திட்டத்தையும் (Annual Plan) தொழிலாளர் நிதி அறிக்கையும் (Labour Budget) தயாரிப்பதுடன், கிராமசபையின் ஒப்புதலையும் பெற வேண்டும். முக்கியமான இந்த வழிமுறைகளை, கிராம ஊராட்சிகள் கடைப்பிடிக்க வைப்பதில், அரசு நிர்வாகத்தின் முறையான திட்டமிடுதல் இல்லாததே, இதுபோன்று வேலை நாட்கள் குறைவாக வழங்கப்பட்டிருப்பதற்கான காரணமாகத் தெரிகிறது. மேலும், முறையாக ஆண்டுத் திட்டம் மற்றும் தொழிலாளர் நிதி நிலை அறிக்கையினைத் தயாரித்த ஊராட்சிகளுக்கும் அவற்றின் அடிப்படையில் வேலைகளைப் பெற்றுத் தர, ஊரக வளர்ச்சித் துறையின் ஒத்துழைப்பு இல்லாமல் இருப்பதையும் பார்க்க முடிகிறது.

மேலும், ஒன்றிய அரசு, இந்த ஆண்டு (2024 – 25) வெளியிட்டுள்ள வழிகாட்டுதலில் (Guidelines) அனுமதிக்கப்பட்ட பணிகளின் அடிப்படையில், மக்கள் பொது இடங்களில் அதிக அளவில் வேலை செய்ய வாய்ப்புள்ள பணிகளைவிடத் தனிநபர் இடங்களில், பண்ணைக்குட்டை போன்ற பணிகளை செய்ய வலியுறுத்துவதால், அதிகமான வேலைநாட்கள் வழங்க முடியாத சூழல் இருப்பதாக வட்டார அளவில் அலுவலர்கள் தெரிவிக்கிறார்கள்.

இத்துடன், 2023-24 நிதியாண்டைக் காட்டிலும் (26.97%) இந்த நிதியாண்டில் (30.97%, 21.11.2024 வரை), பொருள்களின் (material component) சதவீதம், 4% அதிகரித்திருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது (பார்க்க: https://nreganarep.nic.in).

பெருவாரியான மக்களின் வாழ்வாதாரம் சார்ந்த ஒரு திட்டத்தில், முறையாக திட்டமிடுவதற்கு கிராம ஊராட்சிகளைத் தயார் செய்யாமல், அவற்றுக்கு ஒத்துழைப்பு கொடுக்காமல், அரசு நிர்வாகம் மெத்தனப் போக்குடன் இருப்பது ஏற்கத்தக்கதல்ல. அதேபோல், திறன்சாரா மனித வேலை நாட்களைக் காட்டிலும் பொருள்சார் வேலைகளுக்கு அரசு முக்கியத்துவம் அளிப்பதும் சரியல்ல.

எனவே,

1. வரும் 30.11.2024 தேதிக்குள் அனைத்து கிராம ஊராட்சிகளும் தங்களுக்கான ஆண்டுத் திட்டம் மற்றும் தொழிலாளர் நிதிநிலை அறிக்கையினை முறையாகத் தயார் செய்யும் வகையில், அரசு நிர்வாகம் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும்.
2. ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்து, மக்கள் அதிக அளவில் வேலை செய்ய வாய்ப்புள்ள பணிகளுக்குத் தடைகள் இருந்தால் அதனை உடனடியாக நீக்கிடவும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. பணிகளைத் திட்டமிடும் போது, திறன்சாரா மனித வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் ஊராட்சிகள் திட்டமிட அரசு உதவ வேண்டும்.

இறுதியாக, நூறு நாள் வேலைத் திட்டத்தில், தேவைப்படும் நிர்வாகச் சீர்திருத்தங்களை உடனடியாக மேற்கொண்டு, ஒன்றிய அரசிடம் பணிகளுக்கான உரிய அனுமதியையும் பெற்று, வேலை அட்டையுள்ள குடும்பங்களுக்கு முறையாக நூறு நாட்கள் வேலை கிடைப்பதை உறுதி செய்யும் செயல்பாடுகளைத் தமிழ்நாடு அரசு உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்று தன்னாட்சி வலியுறுத்துகிறது.

For Thannatchi
President

தன்னாட்சி THANNATCHI

For Thannatchi
Gen. Secretary